# கல்வி அமைச்சின் பிரதான ஆணையாளர் (ஆசிரியர் கல்வி) பதவிக்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்யப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத்தேர்வின் புள்ளி நடைமுறை

**1. மூப்புநிலை** **அதிகபட்ச புள்ளிகள் 45**

இ.க.நி.சே பிரமாணக்குறிப்பிற்கமைவாக அடிப்படை தகைமைகளின் கீழ் காட்டப்பட்டுள்ள இ.க.நி.சே I ஆம் தரத்தின் 05 வருட கட்டாயச் சேவைக்கு மேலதிகமாக இ.க.நி.சே I ஆம் தரத்தின் தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்திற்கு ஒருவருடம் தொடர்பில் வழங்கப்படும் புள்ளிகளின் அளவு. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் 01/2019 ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி தகைமைகளை பூர்த்தி செய்வதற்காக தேவைப்படும் ஆகக்கூடிய சேவைக்காலத்துடனான உத்தியோகத்தருக்கு மூப்புநிலையனை கருத்திற்கொண்டு ஒதுக்கப்பட்ட மொத்த புள்ளிகளும் ஏனைய அலுவலர்களுக்கு விதிதாச்சார அடிப்படையில் மேலதிக சேவைக் காலத்திற்கும் புள்ளிகள் கிடைக்கும் வகையில் புள்ளி வழங்குதல் மேற்கொள்ளப்படுகின்றது.

குறிப்பு - இ.க.நி.சே II ஆம் தரத்தில் 02 வருட சேவைக்காலத்துடன் II மற்றும் III ஆம் தரங்களில் 12 வருடங்களுக்கு மேலாக தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தை பூர்த்தி செய்த பின்னர் I ஆம் தரத்திற்கு உயர்வு பெற்ற உத்தியோகத்தர்களின் முழு சேவைக்காலம் 12 வருடங்களுக்கு மற்றும் II ஆம் தரத்தில் 02 வருடங்களுக்கு மேலான மேலதிக மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தையும் தரம் I என கருதி புள்ளிகள் வழங்கப்படும்.

**2. கல்வித் தகைமைகள்** **அதிகபட்ச புள்ளிகள் 20**

2.1. தத்துவமானி (PhD) - 20 புள்ளிகள்
2.2 தத்துவஞானி (M Phil) - 15 புள்ளிகள்
2.3 பட்டப்பின் பட்டம் - 12 புள்ளிகள்
2.4 பட்டப்பின் பட்ட டிப்ளோமா - 08 புள்ளிகள்

(வினைத்திறன் தடைதாண்டலில் இருந்து விடுவிப்பதற்கு கருத்திற்கொள்ளப்பட்ட தகைமைகளைத் தவிர வேறு கல்வித் தகைமைகள் மாத்திரம் மேற்படி புள்ளி வழங்கும் முறைமை தொடர்பாக கருத்திற்கொள்ளப்படுவதுடன், ஒரு சான்றிதழுக்கு/ ஆகக்கூடிய தகைமைகளுக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும். மேலும் கல்கவைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகங்கள/நிறுவனங்களில் கற்றுக்கொண்ட, சேவை பிரமாணக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அல'லது கல்விச் செயலாளரினால தீர்மானிக்கப்படும் கல்வித்துறைக்குரிய கல்வித் தகைமைகள் தொடர்பாக மாத்திரம் உரிய புள்ளிகள் வழங்கப்படும்.)

**3. கணினிக் கல்வி தொடர்பான அறிவு** **அதிகபட்ச புள்ளிகள் 05**

(செயன்முறை பயன்படுத்தல் தொடர்பில் கருத்திற்கொள்ளப்படும்)

**4 ஆங்கில மொழித்தேர்ச்சி** **அதிகபட்ச புள்ளிகள் 05**

( தொடர்பாடல் திறன் குறித்து கவனிக்கப்படும்)

**5 கல்வி தொடர்புடைய ஆராய்ச்சிகள் மற்றும் வெளியீடுகள்** **அதிகபட்ச புள்ளிகள் 05**

5.1 ஆராய்ச்சி

I தனிநபர் ஆராய்ச்சி அறிக்கை – புள்ளிகள் 2.5 x 2

Ii குழு ஆராய்ச்சி அறிக்கை – புள்ளிகள் 1.5 x 2



Scanned with MOBILE SCANNER

(பட்டப்பின் பட்டம் /பட்டப்பின் பட்ட டிப்ளோமா தொடர்பாக முன்வைக்கப்பட்ட ஆய்வறிக்கைகளுக்கு உரிய ஆராய்ச்சி/ஆய்வறிக்கைகள் தொடர்பில் புள்ளகிள் வழங்கப்படமாட்டாது என்பதுடன், பிரபலமான ஆராய்ச்சி மன்றத்திற்கு (Research Symposium) முன் வைக்கப்பட்டட அல்லது ஆராய்ச்சி சஞ்சிகை ஒன்றில் (Research Journal) பிரசுரிக்கப்பட்ட ஆரா ய்ச்சி அறிகைகைகளுக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்.

5.2 புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் - புள்ளிகள் 2.5 x 2

(புத்தகங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய குறிப்பு புத்தகங்கள் தொடர்பாக புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது என்பதுடன், கல்வி நூல் வெளியீட்டு ஆலோசனை சபையின் அனுமதி பெற்ற தனிப்பட்ட ஆசிரியர்கள் உரிமை கூறும் புத்தகங்கள் மற்றம் சஞ்சிகைகளுக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும் போது கருத்திற்கொள்ளப்படும்)

* உச்சகட்ட ஆராய்ச்சிகள் மற்றும்/அல்லது இரண்டு புத்தகங்கள் மாத்திரம் வழங்கப்படும்

5.3 கல்வி வெளியீடுகள் தொடர்பாக வழங்கப்படும் அறிக்கைகள் மற்றும் தொகுப்புகள் ஒன்றுக்கு 01 புள்ள வீதம் ஆகக்கூடிய 05 க்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்.

**6 சேவை மதிப்பீடு** **அதிகபட்ச புள்ளிகள் 05**

கல்விச் செயலாளர் அல்லது திணைக்களத் தலைவரினால் பொது 230 பீ பாராட்டு மற்றும் பிழைகளை காட்சிப்படுத்தும் படிவம் படி முறையாக வெளியிடப்பட்ட சேவை மதிப்பீடு தொடர்பாக ஒன்றுக்கு 01 புள்ளி வீதம் 05 சேவை மதிப்பீடுகள் தொடர்பாக

குறிப்பு : திணைக்களத் தலைவர் என்பவர்,மாகாணத் தலைமைச் செயலாளர், மாகாணக் கல்விச் செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர், பரீட்சை ஆணையாளர் நாயகம் அல்லது கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம் ஆவார்

**7 சமர்ப்பித்தல்** **அதிகபட்ச புள்ளிகள் 10**

தங்கள் நிறுவனத்தில்" நீங்கள் கடமைகளை நிறைவேற்றும்போது, கல்வித் துறையின் பண்புத்தரம் மற்றும் விளைத்திறனை உயர்த்துவதற்காக அடிப்படையான **விடயம்/சந்தர்ப்பத்தை** அடிப்படையாகக் கொண்டு அதை பகுப்பாய்வு செய்து சமர்ப்பிக்கப்படுபவை தொடர்பில் பின்வருமாறு புள்ளிகள் வழங்கப்படும்.

| | |
|---|---|
| i. நுழைவு மற்றும் அறிமுகம் | 2 புள்ளிகள் |
| ii உள்ளடக்கம் | 2 புள்ளிகள் |
| iii நேர முகாமைத்துவம் | 2 புள்ளிகள் |
| iv சமர்ப்பிக்கப்படும் முறை | 2 புள்ளிகள் |
| v முடிவு மற்றும் தீர்மானம் | 2 புள்ளிகள் |

அதற்காக கணினி உதவியுடன் (Power Point) அல்லது வேறு பொருத்தமான முறையில் 05 நிமிட வாய்வழி சமர்ப்பித்தலை மேற்கொள்ள வேண்டியதுடன் மேற்கொள்ளப்படும் சமர்ப்பித்தலுக்குரிய கடிம பிரதியை தேச்வுக்குழுவிற்கு வழங்கப்பட வேண்டும்.

8. நேர்முகத் தேரிவின் போது வெளிப்படுத்தும் ஒட்டுமொத்த திறன்களுக்கு **அதிகபட்ச புள்ளிகள் 05**

**100**



Scanned with MOBILE SCANNER